# கொரோனா இடர் நிலையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் எதிர்கொண்ட சாவால்களும் அதற்கான தீர்வுகளும் : மருதமுனை – 03 கிராம சேவகர் பிரிவில் இயங்கும் கைத்தறி உற்பத்தி நிறுவனங்களை மையபப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு

M.S. Mohamed Safreen

*Community Correction Officer, Magistrate's court kalmunai*

*breez1988@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகம் தோன்றியது முதல் இன்று வரையில் காலாகாலமாக பல்வேறு இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தங்களை சந்தித்துக்கொண்டுதான் வருகிறது. அந்தவகையில் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் முழு உலகையும் உலுக்கிய பேரிடரான கொரோனா தொற்று இன்றுவரையும் பல அழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இது எமது நாட்டையும் விட்டுவைக்கவில்லை. நாடளாவிய ரீதியில் இதன் தாக்கம் உணரப்பட்டது தொடக்கம் இன்று வரையில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவுகொண்டதோடு மட்டுமல்லாது பொருளாதாரம், சுகாதாரம், உற்பத்தி, அரச சேவை, கல்வி, அபிவிருத்தி மற்றும் விவசாயம் என பல துறைகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. சிறிய அளவிலான உற்பத்தி நிறுவனங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டன. தங்களது தொழிலினை தொடர்ந்தும் கொண்டுநடாத்த முடியுமா என்ற அச்சம் அவர்களை மேலும் சோர்வடையச் செய்தது. அதிலும் விசேடமாக உற்பத்தி மூலப்பொருட்களுக்கு வெளிநாடுகளை நம்பியிருந்த நெசவுசார் உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. எனவே மருதமுனை 03ஆம் பிரிவு நடுத்தர நெசவு உற்பத்தியாளர்கள் கொரோனா இடர்நிலையில் எதிர்கொண்ட சவால்களை இவ்வாய்வு ஆராய்கிறது. இவ்வாய்வானது பண்பு ரீதியான அளவீடுகளைக் கொண்ட ஆய்வாகும். இதில் முதலாம் நிலைத் தரவுகளும், இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிரதானமாக ஒழுங்கமைக்கப்படாத நேர்காணல் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களாகக் கருதப்படும் நெசவுக் கைத்தொழில் முயற்சியாளர்களிடம் பெறப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படுள்ளன. பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மருதமுனை 03 பிரதேசத்தில் கொரோனாத் தொற்றினால் பாதிப்புற்றிருக்கும் நெசவுக் கைத்தொழில் நிறுவனங்கள் அப்பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்கும், அவற்றின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் சாத்தியமான பரிந்துரைகளையும் யுக்திகளையும் இவ்வாய்வு முன்வைக்கிறது.*

***திறவுச்சொற்கள்:*** *அனர்த்தம், கொரோனா, சிறிய கைத்தொழில், நடுத்தர கைத்தொழில்*

---

## *1.* ***ஆய்வுப் பின்னணியும் அறிமுகமும்***

***2019*** *ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவின் வூஹான் மாகாணத்தில் ஆரம்பமான கொவிட்- 19 என அழைக்கப்படும் கொரோனா தொற்று நோயானது உலகளாவிய ரீதியில் சுகாதார நிலையில் மாத்திமன்றி ஒட்டுமொத்த பொருளாதார இயங்கியலிலும் எதிர்பாராத பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் 2020 மார்ச் மாத காலப் பகுதியில் கொரோனா தொற்றின் தாக்கம் நாடளாவிய ரீதியில் உணரப்பட்டது. இது வரை (2022.05.07) தொற்று உறுதி செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 660 125 ஆகக் காணப்படும் அதே வேளை குணமடைந்து வெளியேறியவர்களின் எண்ணிக்கை 635 345ஆகவும், தொற்றினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 16 124 ஆகவும்,*


ISBN: 978-624-5736-55-3

*தொற்று உறுதி செய்யப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 402 ஆகவும் காணப்படுகின்றது (*Health Promotion Bureau*). உலகின் பிற பகுதிகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பாக ஆசியாவிலே இலங்கையில் கொரோனா தொற்றினால் ஏற்பட்ட சுகாதார ரீதியான பாதிப்பின் அளவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இருப்பினும், மக்களின் பொருளாதா நடவடிக்கைகள் இன்றளவிலும் பல இடர்பாடுகளை எதிர்கொண்ட வண்ணமே உள்ளன. வைரசின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு நாடளாவிய ரீதில் கொரோன பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் (*Qurantine Program*), ஊரடங்கு (*Curfew*) மற்றும் முடக்கம் (*Lock Down*) ஆகியவற்றை அமுல்படுத்தியதோடு, பொதுமக்கள் தங்களது நாளாந்த அத்தியவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக குறிப்பிட்ட காலத்திற்குக் காலம் ஊரடங்கினைத் தளர்த்தி, வெளிச் செல்பவர்களுக்கு சமூக இடைவெளியைப் பேணுதல், ஒன்று கூடலைத் தவிர்தல், முகக் கவசம் அணிந்து கொள்ளுதல் போன்ற பல பாதுகாப்பு நடைமுறைகளையும் கட்டாயப்படுத்தியது. இவ்வாறானதொரு அசாதாரண சூழலில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதோடு, நாடளாவிய ரீதியில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங்கள் பாரிய நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொள்ள நேரிட்டன. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெருமளவு வகிபாகத்தினை செலுத்தும் இத்தகைய நிறுவனங்களின் தொடர்ச்சியான இயக்கமும், வளர்ச்சியும் நாட்டின் பொருளாதார நிலையினை வலுப்படுத்துவதற்கு மிகவும் இன்றியமையாததாகும். அந்த வகையில் கல்முனைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மருதமுனை 03 கிராம சேவகர் பிரிவில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களாக அடையாளப்படுத்தப்படும் நெசவுக் கைத் தொழில் நிறுவனங்கள் கொரோனாத் தொற்றினால் எதிர்நோக்கிய சவால்களை ஆராய்வதற்கு இவ்வாய்வு மேற்கொள்ளப்படடுள்ளது.*

*சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளைப் பொறுத்தமட்டில் அவை நாட்டின் பொருளாதார வளர்ச்சி, பிரதேச அபிவிருத்தி, தொழில் உருவாக்கம், வறுமை ஒழிப்பு போன்றவற்றிற்கு ஆதார சக்தியாகக் கருதப்படுகின்றன. இவை மொத்த தொழில் முயற்சிகளின் எண்ணிக்கையில் 75% வீதமாகவும், தொழில் வாய்ப்புக்களின் 45% வீதமாகவும் காணப்படும் அதே வேளை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% வீதமாகவும் பங்களிப்புச் செய்கின்றன. எனவேதான், ஆய்வாளர்கள் பலரும் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என இதனைக் குறிப்பிடுகின்றனர்.*

*ஒவ்வொரு நாடும் தங்களுடைய அபிருத்தி மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை வெவ்வேறு வகையில் வரையறை செய்கின்றன. மாத்திரமன்றி, நாடுகளுக்குள்ளேயும் வெவ்வேறு பிராந்தியங்கள் மற்றும் நிறுவனங்கள் இது தொடர்பில் மாறுபட்ட வரையறைகளைப் பின்பற்றுகின்றன. ஊழியர்களின் எண்ணிக்கை, வருடாந்த வருமானம் , மொத்த முதலீடு ஆகியன பொதுவாகப் பயன்படுத்தப்படும் அளவு கோல்களாகும். இலங்கையைப் பொறுத்தமட்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான தெளிவான வரையறைகள் இல்லை. இலங்கை தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களம் பத்து பேருக்குட்பட்ட ஊழியர்களைக் கொண்ட தொழில் முயற்சியை சிறிய அளவிலானது என்றும் 10 – 90 வரையிலான ஊழியர்களைக் கொண்ட தொழில் முயற்சியை நடுத்தர அளவிலான தொழில் முயற்சி என்றும் வகைப்படுத்தியுள்ளது(*Satharasinghe, *2015). சிறு கைத்தொழில்*


ISBN: 978-624-5736-55-3

*திணைக்களமானது 5 மில்லியனுக்குட்பட்ட மூலதனத்தினையும், 50 ஊழியர்களையும் கொண்டவை சிறிய அளவிலான கைத்தொழில் என்றும், 5 – 25 மில்லியனுக்குட்பட்ட மூலதனத்தினையும் 50 – 100 வரையிலான ஊழியர்களையும் கொண்டவை நடுத்தர அளவிலான கைத்தொழில் என்றும் வகைப்படுத்தியுள்ளது(*Dasanayake*, 2010).*

*இவ்வாய்வினை மேற்கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசம் மருதமுனையாகும். இலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒரு கிராமமான இது கல்முனை நகரிலிருந்து வடக்கே 2.4 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் மொத்த சனத்தொகை 17 648 ஆகும். இங்கு காணப்படும் 08 கிராம சேவகர் பிரிவுகளிலும் 5031 குடும்பங்கள் வசித்து வருகின்றன. கல்முனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 29 கிராம சேவகர் பிரிவுகளிலும் அதிக மக்கள் தொகை கொண்ட கிராம சேவகர் பிரிவாக மருதமுனை – 03 அடையாளப்படுத்தப்படுகின்றது. இங்கு வாழும் மக்களின் மொத்த எண்ணிக்கை 5036 ஆகும்(*Resource Profile*, 2022).*

*மருதமுனையில் 6935 பேர் தொழில்களில் ஈடுபடுகின்றனர். இவர்கள் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் தொழில்களில் மாத்திரமன்றி மீன்பிடி, நெசவு, வியாபாரம், உணவு உற்பத்தி, சிறுகைத்தொழில் என்பவற்றோடு பல்வேறுபட்ட சுய தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் தொழில்கள் தவிர்த்து நோக்கின், இங்கு வாழும் மக்கள் அதிகமாக மேற்கொள்ளும் தொழிலாக நெசவுக் கைத்தொழில் விளங்குகின்றது. இத்தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை 1360 ஆகும். அதிலும் மருதமுனை 03 இல் 243 பேர் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது **(Resource Profile**, 2022).*

*மருதமுனையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி என்ற ரீதியில் உணவு, பானவகைகள் உற்பத்தி மற்றும் விற்பனை, நெசவு ஆடை உற்பத்தி மற்றும் விற்பனை ஆகிய இரண்டு பகுதிகளும் பிரதானமாகக் காணப்படுகின்றது. நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட கொரோனா அச்சுறுத்தல் இத்தொழில் முயற்சிகளுக்கும், தமது வாழ்வாதாரத்துக்காக அவற்றை நம்பி வாழும் மக்களுக்கும் பாரிய சவால்களாகக் காணப்பட்டது. அந்தவகையில், இவ்வாய்வானது மருதமுனையின் அடையாளமாகக் கருதப்படும் நெசவு ஆடைக் கைத்தொழில் நிறுவனங்களில் கொரோனா ஏற்படுத்திய தாக்கம் குறித்து ஆராய்கின்றது. நாட்டை வளப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் தற்போதைய அரசு கிராமிய மற்றும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதில் அதிகம் கரிசனை காட்டி வருவதால் கொவிட் - 19 இனால் பாதிப்புற்றிருக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைகளை மேம்படுத்த இந்த ஆய்வு மேலும் உறுதுணையாக அமையும்.*

*2.* **ஆய்வு நோக்கங்கள்**

*பிரதான நோக்கம் :*

> *மருதமுனை 03 கிராம சேவகர் பிரிவில் இயங்கும் நெசவுக் கைத்தொழில் நிறுவனங்கள் கொரோனாத் தொற்றினால் எவ்வாறான சவால்களை எதிர்கொண்டுள்ளன என்பதை ஆராய்ந்து வெளிக்கொணர்தல்.*


ISBN: 978-624-5736-55-3

*உப நோக்கம் :*

*கொரோனாத் தொற்றினால் பாதிப்புற்றிருக்கும் நெசவுக் கைத்தொழில் நிறுவனங்கள் அப்பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்கும், அவற்றின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் சாத்தியமான பரிந்துரைகளை முன்வைத்தல்.*

*3.* ***முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு***

*இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பில், சண்டிலிப்பாய் பிரதேசத்தை மையமாகக் கொண்டு 'சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பொருளாதார மற்றும் சமூக் பங்களிப்பு' (2017) என்ற தலைப்பில் வெளிவந்த அ.அருள்விபல்ராஜ் மற்றும் சி. விஜயகுமார் ஆகியோரது ஆய்வுக் கட்டுரை முக்கியமானது. இது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மூலம் குறித்த பிரதேசத்தில் தொழில் புரியும் ஊழியர்களின் வாழ்க்கைத் தரம் எந்நிலையினை அடைந்திருக்கிறது என்பது பற்றியும், அவற்றினூடாக ஏற்பட்டுள்ள பிரதேச அபிவிருத்தி பற்றியும், நிறுவனங்களின் ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்பு குறித்தும் ஆராய்கின்றது.*

*'நிதிபெறல் மூலம் மேற்கொள்ளப்படும் சிறுகைத்தொழில்களும் அதன் அடைவு மட்டமும்' (2016) என்ற தலைப்பில் எம்.ஐ.எப் மாஜிதா மற்றும் எஸ்.எம்.எம் மஸாஹிர் ஆகியோர் மருதமுனைப் பிரதேசத்தை மையப்படுத்தி மேற்கொண்ட ஆய்வும் இங்கு கவனித்தலைப் பெறுகின்றது. நிதி நிறுவனங்களிலிருந்து நிதி பெறல் வழியாக மேற்கொள்ளப்படும் சிறுகைத் தொழில்கள் மூலம் மருதமுனை வாழ் மக்களின் வறுமை நிலை குறைந்துள்ளதா? என்பது குறித்தும் நிதி வழங்கல் சேவைகள் மூலம் இப்பிரதேசத்தில் சிறுகைத்தொழில் துறை மேம்பட்டுள்ளதா? என்பது குறித்தும் இக்கட்டுரை ஆராய்கின்றது.*

*மருதமுனை நெசவுக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு என்ற ரீதியில் நோக்கும் போது ' நெசவுக் கைத்தொழிலினூடக பெண்களை வலுவூட்டல்: மருதமுனைப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு' (2016) என்ற தலைப்பில் வெளிவந்த என்.எப்.சப்னா, ஏ.ஏ.எம் நுபைல் ஆகியோரது ஆய்வுக் கட்டுரை முக்கியமானதாகும். நெசவுக் கைத்தொழிலினூடாக பெண்களை வலுவூட்டுவது, மருதமுனை பெண் நெசவாளர்களின் பொருளாதார நிலை, பெண் நெசவாளர்கள் மூலம் கிடைக்கின்ற வருமானம், பெண் நெசவாளர்கள் வேலையின் போது எதிர்கொள்ளும் சவால்கள், மருதமுனை பெண் நெசவாளர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொருத்தமான தீர்வுகள் என்பன குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.*

*மருதமுனை நெசவுக் கைத்தொழிலின் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் பற்றிய பகுப்பாய்வு (2016) என்ற தலைப்பில் பீ.எம்.முபீன், எச்.பசீல் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வு மற்றுமொரு முக்கியமான வெளியீடாகும். இது முறையான உற்பத்தி, விலை, இடம் மற்றும் விளம்பரப்படுத்தல் சார்ந்த தந்திரோபாயங்களைக் கண்டாராய்ந்து வெளிக்கொணர்வதாக அமைந்துள்ளது.*

*மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பிலும், குறிப்பாக மருதமுனை நெசவுக் கைத்தொழில் தொடர்பிலும் வெவ்வேறு நோக்கங்களுடன்*

*மேற்கொள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இருப்பினும், கொரோனா தொற்று நாடளவிய ரீதியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை பாதித்திருக்கின்ற சூழலில் இது வரை அது குறித்த விரிவான ஆய்வுகள் எவையும் தனித்ததொரு பிரதேசத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். இந்த வகையில் மேற்படி நிலவுகின்ற ஆய்வு இடைவெளியின் ஒரு சிறு பகுதியினைப் பூர்த்தி செய்யும் முகமாக மருதமுனை 03 கிராம சேவகர் பிரிவில் இயங்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுள் அடங்கும் நெசவுக் கைத்தொழில் நிறுவனங்களை மையப்படுத்தி அந்நிறுவனங்களில் கொரோனாத் தொற்று எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை இவ்வாய்வு ஆராய்கின்றது.*

*4.* **ஆய்வு முறையியல்**

*இது பண்பு ரீதியான அளவீடுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வாகும். இவ்வாய்விலே முதலாம் நிலைத் தரவுகளும், இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக மருதமுனை 03 கிராம சேவகர் பிரிவில் இயங்கும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களாகக் கருதப்படும் நெசவுக் கைத்தொழில் முயற்சியாளர்களிடம் (தொழில் வழங்குநர்கள்) ஒழுங்கமைப்பற்ற நேர்காணல் மூலம் (*Unstructured Interviews*) பெறப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக கல்முனை பிரதேச செயலக புள்ளி விபரவியல் அறிக்கைகள் (*Resource Profile *2022), மருதமுனை 03 கிராம சேவகரினால் வழங்கப்பட்ட தகவல்கள், தேசிய தொழில் முயற்சி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அனவிலான தொழில் முயற்சி அபிவிருத்திக்கான தேசிய கொள்கையில் உள்ளடங்கும் தரவுகள் மற்றும் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*5.* **ஆய்வுப் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

*இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் நெசவுக் கைத்தொழிலால் பிரபல்யமடைந்த கிராமமாக மருதமுனை அடையாளப்படுத்தப்படுகின்றது. இங்கு ஆரம்ப காலப் பகுதியில் (1960 களுக்கு முன்னர்) பருமனான நூல்களைக் கொண்டு பால் சோமன், சலங்கைச் சோமன், மருதமூட்டுச் சோமன் என்பனவும், ஆண்கள் அணிவதற்கென கனமான சாரன்களும் இக் கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்பட்டன. பின்னர் பெட்சீட்டுகள், சால்வைகள் என்பனவும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. 1960 களில் ஒத்தை மூட்டுச் சாரன்கள், இரட்டை மூட்டுச் சாரன்கள் மற்றும் மெல்லிய சேலைகளும் உற்பத்திகளாக வெளிவந்தன. இன்றைய சூழலில் சாரி, சாரன் மாத்திரமன்றி பெட்சீட், கைக்குட்டை, கைப்பை எனப் பல பொருட்கள் மக்களின் விருப்பங்களையும், தேவைகளையும் அடிப்படையாக கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன.*

*மருதமுனையில் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட நெசவுக் கைத்தொழிலானது காலத்திற்குக் காலம் பல்வேறு சவால்களை சந்தித்து வந்திருக்கின்றது. 1977 ஆம் ஆண்டளவில் அன்றைய அரசு பின்பற்றிய தாராளஃதிறந்த பொருளதாரக் கொள்கை, 1978 ஆம் ஆண்டு வீசிய சூறாவளி, 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் என அரசின் பொருளாதாரக் கொள்கை, இயற்கை அனர்த்தங்கள் சார்ந்த காரணிகளால் மாத்திமன்றி, சந்தைப்படுத்தல் சார்நத சிக்கல்கள், இளம் தலைமுறையினரின் வருகையின்மை, பயிற்சியற்ற தொழிலாளர்கள், உற்பத்திக்கான மூலப்பொருள்களின் தரமின்மை, இறக்குமதி வரி போன்ற காரணங்களாலும் மருதமுனையின்*

*நெசவுக் கைத்தொழில் துறையில் பல எண்ணற்ற சவால்களை ஊழியர்களும் தொழில் முயற்சியாளர்களும் எதிர்கொண்டு வந்திருக்கின்றனர். அந்த வரிசையில் அண்மையில் சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் சுகாதாரம், கல்வி,பொருளாதாரம் போன்ற பல துறைகளில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்திய கொரோனா தொற்று மருதமுனையின் நெசவு ஆடைத்தொழில் முயற்சிகளையும் கடுமையாகப் பாதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், மருதமுனை 03 கிராம சேவகர் பிரிவில் இங்கிவரும் நெசவுக் கைத்தொழில் நிறுவனங்கள் அல்லது தொழில் முயற்சியாளர்கள் (உற்பத்தியாளர்கள்) கொரோனாவினால் எதிர்கொண்ட சவால்களைப் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்:*

### *5.1 **உற்பத்திக்கான மூலப்பொருள் சார்ந்த பிரச்சினைகள்***

*நெசவுக் கைத்தொழிலின் பிரதான மூலப்பொருள் நூலாகும். இது இந்தியாவிலிருந்து துறைமுகம் வழியாக தலைநகரான கொழும்பிற்குக் கொண்டு வரப்படுகின்றது. நெசவு ஆடை உற்பத்தி நிறுவனங்கள் தலைநகரிலிருந்தே பெரும்பாலும் தங்களுக்குத் தேவையான நூல்களைக் கொள்வனவு செய்கின்றன. கொரோனா தொற்றின் அச்சுறுத்தல் ஆரம்பித்த காலப்பகுதியில் (மார்ச் மாதம்) மக்களின் பாதுகாப்பு கருதி விமான நிலையங்கள், துறைமுகங்கள் உட்பட இலங்கையின் போக்குவரத்து நடவடிக்கைகள் அனைத்தும் முடக்கப்பட்டன. இதனால் நூல் வருகையும் தடைப்பட்டது. தலைநகரில் மீண்டும் நூல்களைக் கொள்வனவு செய்யகூடிய சூழல் உருவாகியிருந்தும் நூல்தட்டுப்பாடு என்பது பெரும் பிரச்சினையாகக் காணப்பட்டது. நெசவு ஆடை உற்பத்தியாளர்கள் நூல்களைக் கொள்வனவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். சில உற்பத்தியாளர்களிடம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உற்பத்தி செய்த பொருட்கள் எவையும் விற்பனையாகாமல் தேங்கியிருந்தமையால் மூலதனப் பற்றாக் குறை ஏற்பட்டது. வியாபாரிகளும் நூல் தட்டுபாட்டைக் காரணம் காட்டி அவர்களிடம் காசோலைக்கு நூல்களை வழங்க மறுத்தனர். சில நூல் விற்பனையாளர்கள் தொழில் வழங்குணர்களிடம் நூல் தட்டுப்பாட்டை காரணமாக வைத்து விலையேற்றியும் விற்றனர்.*

*நெசவுக் தொழில் முயற்சியாளர்களில் சிலர் சித்திரைப் புத்தாண்டு உற்பத்திக்காக கொள்வனவு செய்து வைத்திருந்த நூல்களில் எஞ்சியவற்றைக் கொண்டு ஊழியர் வாழ்வாதார நலன் கருதி குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களுடன்(கைவசம் உள்ள நூல்களின் அளவுக்கு எற்ப) கைத்தறிப் பணிகளை மேற்கொண்டனர். இன்னும் சில தொழில் முயற்சியாளர்களிடம் நூல்கள் எஞ்சியிருந்தும் மூலதனம் முழுமையாக இல்லாமல் போனமையால் (உற்பத்தித் தேக்கம் காரணமாக) சம்பளம் வழங்க முடியாத நிலையும் ஏற்பட்டது.*

### *5.2 **சேவையாட்கள் (ஊழியர்கள்) முகாமை சார்ந்த பிரச்சினை :***

*சேவையாட்கள் எனும் பொழுது நூல் நூற்பவர்கள், பாவோடுபவர்கள், பாப்பிணைப்பவர்கள், கைத்தறியில் நெய்பவர்கள், சாரன் மூட்டுபவர்கள், சாரிக்குக் குஞ்சம் கட்டுபவர்கள் ஆகியோர் உள்ளடங்கினாலும் நிறுவனத்திற்குச் அல்லது தொழில் வழங்குணர்களுக்குச் சொந்தமான கைத்தறியில் நெய்பவர்களே நேரடி சேவையாட்களாகக் கருதப்படுகின்றனர். இருந்தும் கொரோனா தொற்று உக்கிரமடைந்திருந்த காலப்பகுதியில் மேற்குறிப்பிட்ட அனைவருமே பெரமளவு பாதிக்கப்பட்டிருந்தனர்.*


ISBN: 978-624-5736-55-3

*i. கொரோனா ஆரம்பித்த முதல் வாரத்தில் ஏற்கெனவே கொள்வனவு செய்து வைத்திருந்த நூல்களைக் கொண்டு கைத்தறிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தொழில் வழங்குனர்கள் கைவசம் இருந்த பணத்தைக் கொண்டு சேவையாட்களுக்கான சம்பளங்களை வழங்கினர். இருப்பினும் இரண்டாம் மூன்றாம் வாரங்களில் நிலமை மேசமடைந்தது. மக்கள் பீதியுடன் வீடுகளிலேயே முடங்கியிருக்க வேண்டிய நிலை உருவானதால் தொழியாலளர்கள் தமது இடங்களில் கைத்தறிப் பணிகளை மேற்கொள்ள முடியாமலும், தறி உரிமையாளர்கள் (நிறுவனத் தலைவர்கள்) நெசவு செய்யும் இடங்களுக்குச் செல்ல முடியாமலும் அவதியுற்றனர்.*

*அதே போன்று, நெசவு உற்பத்தி மற்றும் விற்பனை நிறுவனங்களுக்காகநெசவுப் பணிகளை மேற்கொள்ளவோரில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். கொரோனா பாதுகாப்பு முன்னெடுப்புகள் இறுக்கமாக இருந்த சூழலில் மாவட்டம் விட்டு இன்னொரு மாவட்டத்திற்குச் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. இதனால், வெளி மாவட்டங்களில் நெசவு செய்யும் ஊழியர்களுக்கு நூல்களைக் கொண்டு சென்று வழங்க முடியாமல் போனது.*

*ii. கொரோனா காலப்பகுதியில்ல் எஞ்சியிருந்த நூல்களைக் கொண்டு கைத்தறிப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்த சூழலில் குறித்த நிறுவனத்திற்காக நெசவு செய்யும் எல்லா ஊழியர்களுக்கும் நூல்களைக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், சில ஊழியர்கள் தொழில் வழங்குணர்களைக் கோபித்துக் கொண்டனர். சிலர் தொழிலின்மையால் வேறு நிறுவனங்களை நாடினர். இன்னும் சிலர் வேறு தொழில்களை நோக்கிச் சென்றனர்.*

*iii. கொரோனா காலப்பகுதியில் தொழில் வழங்குனர்கள் சேவையாட்களுக்கு சம்பளம் வழங்குவதில் பாரிய சவால்களை எதிர்கொண்டனர். படிப்படியாக உற்பத்தி மூலப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான விதிமுறைகளுடன் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, விற்பனை பெரியளவில் இல்லாவிட்டாலும் கூட ஊழியர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு தொடரந்தும் நெசவுத்தொழிலில் ஈடுபடுமாறு தொழில் வழங்குனர்கள் ஊழியர்களுக்கு ஊக்குவித்தனர். வழக்கமாக வாரத்திற்கு ஒரு முறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் நிறுவனங்கள் 3 வாரத்திற்கு ஒரு முறை மொத்தமாக சம்பளத்தை வழங்கவேண்டிய நிர்பநதமான சூழல் உருவானது. இதற்காக தொழில் வழங்குநர்களுக்கு தமது நுகர்வோராக உள்ள பெரிய வியாபாரிகளின் உதவிகளை நாடவேண்டியிருந்தது. பின்னர் உற்பத்திப் பொருட்களைத் தருவதாக கூறி முற்பணமாக குறித்த தொகையைப் பெற்று அற்றைக் கொண்டு ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்கினர்.*

*மறுபுறம் உற்பத்தி செய்த பொருட்களை வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு சென்று மொத்தமாகக் கடைகளுக்கு விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை காணப்பட்டமையால் உற்பத்திகளின் தேக்கம் அதிகரித்தன. எனவே தொழில் முயற்சியாளர்களின் கையிருப்பில் பணம் குறைவடைந்து ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் தொடர்ந்தும் நெருக்கடி நிலை காணப்பட்டது. இப்படியான இறுக்கமானன சூழலில் ஓரிரு வியாபாரிகளுக்கு நெசவு உற்பத்திப் பொருள்களை உற்பத்திச் செலவை விட குறைவான விலையில் (100/150 ரூபாய் குறைந்து) விற்க வேண்டியும் ஏற்பட்டது.*


ISBN: 978-624-5736-55-3

### *5.3* ***விற்பனை மற்றும் இலாபம் சார்ந்த பிரச்சினைகள்***

***i.*** *இலங்கையில் கொரோனா தொற்று ஆரம்பமான காலப் பகுதியில் பொதுவாக மக்கள் மத்தியில் உயிர் பற்றிய அச்சமும், கொரோனாத் தொற்று நீடிக்கும் என்ற அச்சமும் காணப்பட்டது. அரச ஊழியர்களே தங்களுக்கு அடுத்த மாதம் சம்பளம் கிடைக்குமா என்பது தொடர்பில் சந்தேகம் கொண்டிருந்தனர். சில தனியார் நிறுவங்களில் பணி புரிந்தவர்கள் அரைவாசிச் சம்பளத்தையே பெற்றனர். எனவே சமாளிக்க வேண்டிய நிலையில் இருந்தனர். இதனால் அத்தியவசியப் பொருட்களுக்காக மாத்திரமே பணத்தை செலவளித்தனர். ஆடை வாங்குவது தொடர்பில் பெரிதாக யாரும் ஆர்வம் காட்டவில்லை. இதன் தாக்கம் இன்று வரை நீடிக்கிறது.*

***ii.*** *இலங்கையில் வாழும் மக்களில் 80 வீதமானோர் சித்தரைப புத்தாண்டைக் (ஏப்ரல் 13) கொண்டாடுபவர்கள். இக்காலப் பகுதி கைத்தறி உற்பத்திகள் அதிகம் விற்பனையாகும் காலப் பகுதியாகும். புத்தாண்டை ஒட்டிய விற்பனைகள் அனைத்தும் மார்ச் 20 இற்கு முன்னரே ஆரம்பமாகிவிடும். வழமை போல மொத்த வியாபாரிகள் புத்தாண்டை ஒட்டிய வியாபாரத்தை கொள்வனவு செய்தனர். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மக்கள் சித்தரைப் புத்தாண்டை கொண்டாட முடியாத நிலை ஏற்பட்டதால் மொத்த வியாபாரிகள் கொள்வனவு செய்த உற்பத்திப் பொருட்கள் எவையும் விற்பனையாகாமல் கடைகளிலேயே தேங்கிக் கிடந்தன. இதனால் குறித்த காலப் பகுதியில் வியாபாரத்தை எதிர்பார்த்திருந்தவர்கள் பெரும் ஏமாற்றமடைந்தனர்.*

***iii.*** *உற்பத்தியாளர்கள் மொத்த வியாபாரிகளுடன் காசோலை மூலமான வியாபாரத் தொடர்புகளையே அதிகம் பின்பற்றுகின்றனர். கொரோனவுக்கு முன்னர்(இலங்கையில் கொரோனா பற்றிய பரபரப்பும் அச்சமும் நிலவாத காலத்தில்) சித்திரைப புத்தாண்டுக்காகக் கொள்வனவு செய்த ஆடைகள் எவையும் கொரோனா காலப்பகுதியில் விற்பானையாகததால் வியாபாரிகளுக்கு உரிய காலத்திற்கு வங்கியில் பணத்தை இட முடியாமல் போனது. இதனால் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலைகள் மீண்டன. இன்று மெல்ல மெல்ல பழைய நிலமையை நோக்கி வியாபாரம் நகர்ந்து கொண்டிடுந்தாலும் இது வரை சில வியாபாரிகளிடமிருந்து அத்தொகையினை உற்பத்தியாளர்களுக்கு அறவிட முடியாமலேயே உள்ளனர். சில மொத்த வியாபாரிகள் ஆடைகளை விற்பனை செய்து விட்டு இன்று வரை கொரோனாவைக் காரணமாகக் காட்டி பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றவும் செய்கின்றனர். கொரோனா கட்டுப்பாடுகள் போக்குவரத்து ரீதியாக தளர்த்தப்பட்ட பின்னர் தரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ள வெளிமாவட்டங்களில் உள்ள சில வியாபாரிகளது கடைகளைப் பல தடவைகள் நாடவேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதனால் தொழில் வழங்குநர்களுக்கு அநாவசியமான போக்குவரத்துச் செலவுகளும் ஏற்பட்டன.*

***iV.*** *சில வியாபாரஸ்தரலங்களில் கொரோனா காலப் பிரிவில் விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த பொருட்களை பிந்நாட்களில் வேறு வழியின்றி மீளப் பெற வேண்டிய நிலையும் காணப்பட்டது. இ;தனால் பொருட்களை ஏற்றிச் சென்ற கூலியோடு ஏற்றி வந்த கூலியும் நஷ;டமே. இதனையும் தொழில் வழங்குனர்களே ஏற்க வேண்டியிருந்தது.*

***V.*** *நோன்புப் பெருநாட் காலமும் நெசவு உற்பத்திகள் அதிகமாக விற்பனையாகும் காலப்பகுதியாகும். எப்ரல், மே மாதங்களில் கொரோனா பாதுகாப்பு முன்னெடுப்புகள் தொடர்நதும் அமுலிலிருந்தமையால் பெருநாள் வியாபாரமும் பெருமளவு பாதிக்கப்பட்டது. 50*

*வீதமான பொருட்களே விற்பனை செய்யப்பட்டன. அதிலும் சாரன்கள் மாத்திரமே அதிகம் விற்பனையானது. சாரிகள் விற்பனையாகாமல் தேங்கியே கிடந்தன.*

***Vi.*** *இக்காலப் பகுதியில் நிறுவனங்களில் உற்பத்திப் பொருட்களின் தேக்கம் அதிகரித்துக் காணப்பட்டமையால் மூலதனம் சார்ந்த பிரச்சினையும் ஏற்பட்டது. அதாவது மூலதனம் குறைந்து கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டது. கையில் பண இருப்புக் குறைவடையவே ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவற்காக உற்பத்திச் செலவை விடக் குறைந்த விலையில் சில வியாபாரிகளுக்கு பொருட்களை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் நிறுவனங்கள் பாரிய நஷ்டங்களை சந்தித்தன.*

***Vii.*** *கடைக்கு நேரடியாக வந்து ஆடைகள் வாங்கும் உள்ளூர் மற்றும் அயலூர் வாடிக்கையாளர்களின் வருகை வீதமும் கொரோனா காலப் பகுதியில் மிகவும் குறைவாகவே காணப்பட்டது.*

### *5.4* ***உளவியல் ரீதியான சவால்கள்.***

***i.*** *கொரோனா (கொவிட் 19) தொற்றானது ஓர் அனர்த்தமாகும். இது எப்போழுது குறைவடையும்? எப்போது அதிகரிக்கும்? என்பது குறித்து மக்கள் யாவரும் ஊகிக்க முடியாதிருந்தது. தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பதும், திடீரென குறைவடைவதும் என்ற நிலையே காணப்பட்டது. அப்படித் திடீரென அதிகரித்தால் மீளவும் தொழில் பாதிக்கப்படும் என்ற அச்சம் தொழில் வழங்குனர்கள். ஊழியர்கள் மற்றும் வியாபாரிகள் என அனைவரிடமும் காணப்பட்டது. குறிப்பாக ஊழியர்களுக்கு வாழ்வாதாரம் தொடர்பான அச்சம் உருவாகியிருந்தது. கொரோனா காலப் பகுதியில் நாட்டின் அநேகமான பிரதேசங்களில் தொற்று நோய் பற்றிய வாந்திகள் பரவியமையாலும் மக்கள் அச்சமடைந்தனர் இதனால் வியாபாரிகள் பலர் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதிலிருந்து பின்வாங்கினர்.*

***ii.*** *கொரோனா தொற்று காலப்பகுதியில் தொழில் வழங்குநர்களே (நிறுவனங்களின் தலைவர்கள்) அதிகம் உளவியல் ரீதியாகப் பல நெருக்கடிகளை எதிர்கொண்டனர். இப்படியொரு அனர்த்தத்திற்கு மத்தியில் தொழிலை எப்படி முனனெடுத்துச் செல்வது? தேங்கிக் கிடக்கும் பொருட்களை என்ன செய்வது? ஊழியரகளுக்கு சம்பளம் கொடுக்க எங்கிருந்து பணத்தைத் திரட்டலாம்? ஏற்பட்ட நஷ்டங்களை எப்படி நிவர்த்தி செய்வது? அடுத்த கட்டம் என்ன செய்வது? எனப் பல குழப்பங்கள் ஒரு வகையான மன அழுத்தத்தை உண்டு பண்ணியது.*

## *6.* ***முடிவுரையும் பரிந்துரைகளும்***

*ஆய்வின்படி, கொரோனா தொற்றினால் நிறுவனங்கள் உற்பத்திக்கான மூலப்பொருள், ஊழியர்கள் முகாமை, விற்பனை மற்றும் இலாபம் என்பவற்றோடு உளவியல் சார்ந்த சவால்களையும் எதிர்கொண்டன. தற்சமயம் இந்தியாவிலிருந்து ஆடை இறக்குமதி தடைப்பருப்பதானது உள்ளூர் கைத்தறி சாரன் மற்றும் சாரிகளுக்கான கேள்வி நிலை மெல் மெல்ல அதிகரிக்கும் சாதக சூழலை உருவாக்கலாம் என்று தொழில் முயற்சியாளர்கள் நம்புகின்றனர். ஆனாலும் உற்பத்திப் பொருட்களின் விற்பனையும், வருமானமும் கொரோனாவுக்கு முன்னரான சூழலில் இருந்ததை விட அரை மடங்கு குறைவடைந்துள்ளது. பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நெசவு ஆடை*

*உற்பத்திகளைக் கொள்வனவு செய்த சில மொத்த வியாபரரிகளிடமிருந்து பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அது மாத்திரமின்றி அவர்கள் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காக பெற்றுக் கொண்ட கடன்களும் இன்னும் முழுமையாக நிவத்தி செய்யப்படாமலேயே இருக்கின்றன.*

*அரசு தொடர்ந்தும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், குறிப்பாக நெசவு உற்பத்திகளுக்கான சந்தையை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் கொரோனா தொற்றினால் எதிர்கொண்ட நெருக்கடிகளிலிருந்து நெசவு உற்பத்தியாளர்கள் மீள்வதற்கு உதவ முடிவதோடு வேலையற்றிருக்கன்ற இளைஞர் யுவதிகளுக்கு அதிகமான தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுக்க முடியும்.*

*கொரோனா நாட்டில் பரவுவதற்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து (இந்தியாவிலிருந்து) இறக்குமதி செய்யப்படும் ஆடைகளே அதிகம் நுகரப்பட்டன. குறித்த பொருட்களின் விலை உள்ளூர் உற்பத்திகளின் விலைகளிலும் பார்க்க குறைவாகக் காணப்படுவதே இதற்கு முக்கியமான காரணமாகும். இதனால் சந்தையில் இறக்குமதி செய்யப்படும் சாரன் சாரி போன்ற உற்பத்திகளுடன் உள்ளூர் கைத்தறி உற்பத்திகள் போட்டி போட முடியாத நிலை காணப்படுகின்றது. தற்சமயம் இந்தியாவிலிருந்து ஆடை இறக்குமதிகள் தடைப்பட்டிருப்பதால் நெசவு உற்பத்திகளுக்கான கேள்விகள் அதிகரிக்கும் சாத்தியம் உருவாகி வருகின்றது. எனவே அரசு வெளிநாட்டு ஆடை இறக்குமதி தொடர்பில் கட்டுப்பாடுகளை விதிக்குமாக இருந்தால் உள்ளூர் நெசவு ஆடைகளுக்கான கேள்விகளை மேலும் அதிகரிக்க முடியும்.*

*கொரோனா போன்ற அனர்த்தங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் நெசவு உற்பத்தியாளர்களுக்கு அரசு வட்டியில்லாக் கடன் வசதிகளை உருவாக்கிக் கொடுத்தல் மூலம் ஊழியர்களுக்கு சம்பளங்கள் வழங்குவது தொடர்பாக அவர்கள் எதிர்கொளளும் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.*

*மொத்த வியாபாரிகளின் விற்பனை விலைகளில் கட்டுப்பாடற்ற நிலை காணப்படுவதும் பொதுவாக மக்கள் உள்ளூர் நெசவு உற்பத்திகளை நுகராமைக்கு முக்கிய காரணியாகும். உற்பத்திகளை மொத்தமாகக் கொள்வனவு செய்யும் பல வியாபாரிகள் கொள்வனவு விலையிலிருந்து மிகை இராபம் (350 – 450 ரூபாய் வரை) வைத்து பொருட்களை விறபனை செய்கின்றனர்.இதனால் மக்கள் வெளிநாட்டு உற்பத்தகளை அதிகம் நாடிச் செல்கின்றனர். கொரோனா காலத்தில் பெரும்பாலான மக்களிடம் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகள் காணப்பட்ட நிலையிலும் மிகை இலாபம் வைத்து சில வியாபாரிக் பொருடக்ளை விற்க முனைந்தனர். எனவே விற்பனை விலையில் பொதுவான கட்டுப்பாடு ஒன்றை வியாபாரிகள் பினபற்றுவதற்கான நடைமுறையினை உருவாக்குவதன் மூலம் நெசவு உற்பத்திகளுக்கான நுகர்வு வீதத்தை அதிகரிக்க முடியும்.*

*இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலையின் பழைய மாணவர்கள் தங்களது பாடசாலைகளினது நாமம் தாங்கியதாக (சம்ஸியன்,மனாறியன்,ஹம்ப்றியன்) ஒரே வகையான டீசேட்களை அணிந்து பிரபல்யப்படுத்தி வருகின்றனர். அப்படியான ஆடைகளாக மருதமுனைக் கைத்தறி ஆடைகளைப் பயன்படுத்துமாறு ஊக்குவிக்க முடியும். அதே போன்று இப்பிரதேசத்தில் உள்ள இஸ்லாமிய கல்வி நிலையங்கள் மற்றும் அரபுக் கலாசாலைகள் தங்களது மாணவர்களுக்கு ஜுப்பா, குர்தா போன்ற இன்னொரன்ன ஆடைகளை நெசவுக் கைத்தறித் துணியில் தைத்து அணியுமாறும்*

அறிவுத்த முடியும். இவற்றினூடாக நெசவு உற்பத்திகளுக்கான உள்ளூர் நுகர்வாளர்களை அதிகரிக்க முடியும்.

உள்ளூர் உற்பத்தி பொருள்களைக் கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்றிட்டமொன்றை அரசு முன்னெடுக்க முடியும். இதனூடாக உற்பத்திப் பொருட்களின் தேக்கம், உற்பத்திச் செலவை விடக் குறைந்த விலைக்கும் பொருட்களை விற்றல் ஆகிய பிரச்சினைகளைக் குறைக்க முடிவதோடு உற்பத்திப் பொருட்களின் தரமும் அதிகரிக்கும். இதற்கென அரசு மருதமுனையில் தனது நிறுவனமொன்றை நிறுவி தரப் பரசீலனையுடன் உற்பத்தி பொருட்களை மாதத்திற்கு ஒரு முறையாவது ஏற்றுமதிக்காக கொள்வனவு செய்ய வேண்டும்.

இவை தவிர நெசவுக் தொழில் முயற்சியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் விசேட ஊக்குவிப்பு வேலைத் திட்டங்களை மேற்கொள்தல் செநவுக்கான பல கைத்தொழில் பேட்டைகளை அமைத்து இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தரமான பயிற்சிகளை வழங்குதல் உள்ளூர் நெசவு உற்பத்திகளுக்கு உள்ளூர்களிலேயே சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பனவற்றை அரசு முன்னெடுக்க வேண்டும். கொரோனா காலத்தில் தொழில் வழங்குனர்கள் தாம் எதிர்கொண்ட, எதிரகொண்டு வருகின்ற நெருக்கடி நிலைகளிலிருந்து மீள்வதற்கு இவை பெரும் உதவியாக அமையும்.

இந்த ஆய்வானது வரையறுக்கப்பட்ட காலத்தைக் கருத்திற் கொண்ட மருதமுனை 03 எனும் மிகவும் குறுகிய ஆய்வு எலலைக்குள், தொழில் வழங்குனர்களை மாத்திரம் ஆய்வுச் சமூகமாகக் கொண்டு மேறகொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இயங்குகின்ற ஒட்டு மொத்த நெசவுக் கைத் தொழில உற்பத்தி நிலையங்களிலும் தொழில் வழங்குநர்களை மாத்திரமின்றி ஊழியர்களையும் ஆய்வுச் சமூகமாகக் கொண்டு மேலதிகமான நோக்கங்களுடன் இது போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் போது நெசவுக் கைத் தொழிலினை சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்குள் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரிய அளவில் பங்களிப்புச் செய்யும் பெரும் துறையாக மாற்றுவதற்கான நகர்வினை மேற்கொள்ள முடியும்.

**உசாத்துணைகள்**


Dasanayake,S.W.S.B (2010). Overview of Sri Lanka Small and Medium ScaleEnterprises, *Online Journal*. Vol. 6, Issue 02

Ismail, M.B.M. (2012). A comparative study of sales force turn over (soft) : a case study approach in weaving industry of Maruthamunai, *Kalam Journal,* Vol.5 (22). Faculty of Arts and culture, South Eastern University of Sri Lanka,

Mubeen.P.M. Fazeel.H. (2016). *An analysis of marketing strategies of handloom industry in Maruthamunai*. 6th international Symposium, South Eastern University of Sri Lanka.

Satharasinghe A.J (2015). *Key Indicators of industry Trade and Services Sector Economic Census* 2013/14', press Release Director News, Department of Census and Statistic Ventral Bank of Sri Lanka.

Safna .N.F. Nufile, AAM. (2016). *Women Empowermrent through Weaving Industry: A case study in Maruthamunai, Sri Lanka*. 6th International Symposium, South Eastern University of Sri Lanka.

National Policy for Small Medium Enterprise (SME) Development- National Enterprise



ISBN: 978-624-5736-55-3

Development Authority (NEDA)

Resource Profile (2019), Planning Division, Divisional Secretariat, Kalmunai.

*அருள்வபில்ராஜ், அ.இ விஜயகுமார்,சி. (2017). சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பொருளாதார மற்றும் சமுகப் பங்களிப்பு: சண்டிலிப்பாய் பிரதேசத்தைக் மையமாகக் கொண்ட ஆய்வு. Proceeding of 7th international Symposium, SEUSL.*

*மாஜிதா, எம்.ஐ.எப்., மஸாஹிர், எஸ்.எம்.எம். (2016). நிதி பெறல் மூலம் மேற்கொள்ளப்படும் சிறுகைத்தொழில்களும் அதன் அடைவு மட்டமும்: மருதமுனையை மையப்படுத்தி ஆய்வு 3rd International Symposium, Faculty of Islamic studies and Arabic Language, SEUSL.*

*நௌபல், எம்.எம். (2013 November 28). மருதமுனையில் நெசவுக் கைத்தொழில் மீண்டும் துளிர்விடத் தொடங்குகிறது.* Retrieved from: http://archives.thinakaran.lk/2013/11/28/?fn=f1311281


ISBN: 978-624-5736-55-3